# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 123 | வெள்ளிக்கிழமை Friday | 31.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# மெட்ரோ பணிகளை விரைந்து முடிக்க முதலமைச்சர் விஜய் உத்தரவு



சென்னையில் 2-ம் கட்டமாக ரூ.63 ஆயிரத்து 246 கோடி செலவில் 118.9 கிலோ மீட்டர் தொலைவுக்கு 3 வழித்தடங்களில் மெட்ரோ ரெயில் பணிகள் நடந்து வருகின்றன. இதனை முதல்-அமைச்சர் விஜய் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் மெட்ரோ ரெயில் மூலம் நந்தனம் மெட்ரோ ரெயில் நிலையத்திற்கு விஜய் சென்றார்.அங்குள்ளமெட்ரோ ரெயில் நிலைய தலைமையகத்தில் அதிகாரிகளுடன்முதல்-அமைச்சர் ஆலோசனை நடத்தி கட்டுப்பாட்டு அறையையும் பார்வையிட்டார். நந்தனத்தில் ஆய்வு கூட்டத்தை முடித்து விட்டு கார் மூலம் கிண்டி சென்றார். அங்குள்ள கத்திப்பாரா அருகே பட்ரோட்டில் இருந்து ஆலந்தூர் நகராட்சி அலுவலகம் வரையில் 6 தூண்களை ஒன்று சேர்க்கும் வகையில் 1,354 அடி தூரத்துக்கு 101 அடி உயரத்தில், 410 அடி ஆரத்துடன் கூடிய 'பேலன்ஸ்டு கேன்டிலீவர்' என்ற புதிய தொழில்நுட்பத்துடன் பிரமிப்பூட்டும் வகையில் மெட்ரோ வளைவு ரெயில் பாதை அமைக்கும் பணி இறுதிகட்டத்தை எட்டியுள்ளது.

இதனை முதல்-அமைச்சர் விஜய் பார்வையிட்டு, நவீன தொழில்நுட்பம் மற்றும் பணிகளின் சவால்கள் குறித்து கேட்டறிந்தார். பின்னர் பணிகளை தரமாகவும், திட்டமிட்ட காலத்தில் முடிக்க முதல்-அமைச்சர் உத்தரவிட்டார். பின்னர் போரூரில் இருந்து டிரைவர் இல்லாமல் இயக்கப்படும் நவீன மெட்ரோ ரெயிலில் பூந்தமல்லி புறவழிச்சாலை மெட்ரோ ரெயில் நிலையத்துக்கு விஜய் சென்றார். அங்கு நடந்துள்ள பணிகளின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.மெட்ரோ ரெயில் திட்டங்களை குறித்த காலத்துக்குள் முடிக்க பணிகளைதுரிதப்படுத்துமாறு மெட்ரோ ரெயில் நிர்வாகத்திற்கு முதல்-அமைச்சர்விஜய் உத்தரவிட்டுள்ளார். கத்திப்பாராவின் மெட்ரோ கட்டுமானம், ஆளில்லா மெட்ரோ ரெயில் இயக்கம் தொடர்பான முன்னெடுப்புகள் சிறப்பாக இருப்பதாகவும் முதல்-அமைச்சர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

மேலும் மெட்ரோ கட்டுமானப்பணியில் உள்ள வடமாநில தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது அவசியம் என்றும் போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடங்களில் பயணிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பகலுக்கு மாற்றாக இரவு நேர கட்டுமான பணிகளை கூடுதலாக மேற்கொள்ள அறிவுறுத்தி உள்ளார்.

# தமிழகத்திற்கு காவிரியில் நீர் திறக்க காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவு



தமிழகத்திற்கு காவிரியில் நீர் திறக்க காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டு உள்ளது.

காவிரி நீர் பங்கீடு தொடர்பாக கர்நாடகா - தமிழ்நாடு இடையே பல ஆண்டுகளாக சிக்கல் நீடித்து வருகிறது.

இதனையடுத்து, சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின்படி தமிழகத்திற்கு உரிய நீர் கிடைப்பதை உறுதி செய்வதற்காக காவிரி மேலாண்மை ஆணையம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, டெல்லியில் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு கூட்டம் நடந்தது. இதில் தமிழகம்,கர்நாடக நீர்வளத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் காவிரியில் இருந்து 29-ந்தேதி முதல் (நேற்று) தினமும் 3,500 கன அடி வீதம் அடுத்த 15 நாட்களுக்கு தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிடுமாறு கர்நாடகாவுக்கு காவிரி நீர் முறைப்படுத்தும் குழு உத்தரவிட்டது.

ஆனால், தமிழகத்திற்கு காவிரியில் இருந்து கர்நாடக அரசு தண்ணீரை திறந்துவிடவில்லை.

கர்நாடகாவில் நீர் தேவை அதிகமாக இருப்பதால் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிடும் சூழ்நிலை தற்போது இல்லை என அம்மாநில அரசு கூறி வருகிறது. தமிழகத்திற்கு காவிரியில் இருந்து தண்ணீர் திறக்குமாறு காவிரி நீர் முறைப்படுத்தும் குழு பிறப்பித்த உத்தரவை எதிர்த்து காவிரி மேலாண்மை ஆணையத்தில், கர்நாடக அரசு முறையீடு செய்தது.

ஆணையம் உத்தரவு

இந்த நிலையில், தமிழகத்திற்கு காவிரியில் நீர் திறக்க வேண்டும் என்று காவிரி நீர் முறைப்படுத்தும் குழு பிறப்பித்த உத்தரவை காவிரி மேலாண்மை ஆணையம் இன்று உறுதிப்படுத்தி உள்ளது. இதன்படி, தமிழகத்திற்கு தினமும் 3,500 கன அடி வீதம் அடுத்த 15 நாட்களுக்கு தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று உத்தரவிட்டு உள்ளது.

# காவிரி விவகாரத்தில் தவெக அரசின் மெத்தனப்போக்கை கண்டித்து ஆகஸ்டு.3ல் ஆர்ப்பாட்டம்: தி.மு.க. தலைவர் ஸ்டாலின் பேச்சு



சென்னை:

'விவசாயிகளை வஞ்சிக்கும் தவெக அரசைக் கண்டித்து திமுக சார்பில் ஆகஸ்ட் 3-ம் தேதி காலை 10 மணியளவில் தஞ்சாவூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்' என அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'வேதனை தரும் த.வெ.க. ஆட்சி, விவசாயிகள் படும் துன்பமே அதற்கு சாட்சி என நாட்டின் முதுகெலும்பாய் விளங்கும் விவசாயிகளை வீதிகளில் போராடவிட்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் முதல்வர்.

தேர்தலுக்கு முன்பு, "5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க்கடன்கள் முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும். 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க்கடன்களில் 50 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்படும்" என தவெக தெரிவித்தது. தேர்தலுக்குப் பின்பு 50 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே முழுக் கடன் தள்ளுபடி என்ற வெற்று அறிவிப்பை வெளியிட்டு, அதன்காரணமாக விவசாயிகள் வெகுண்டெழுந்து தற்போது வரை போராட்டம் நடத்திக் கொண்டிருப்பதால், 75 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே முழுக் கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்டது. சொன்னதைச் செய்ய நேரம் கேட்ட முதல்வர்,இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும் என்றாவது விவசாயிகளிடம் சொல்லியிருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்தே மேகேதாட்டு அணை கட்டுவதில் கர்நாடக அரசு தீவிரம் காட்டி வருகிறது.ஜூன் 11 அன்று ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களை கர்நாடக முதல்வர் நேரில் சந்தித்து மேகேதாட்டு திட்டத்துக்கு நிதியுதவி கோரி மனு அளித்துள்ளார். ஜூன் 12 அன்று ஒன்றிய ஜல்சக்தி துறை அமைச்சரை நேரில் சந்தித்து மேகேதாட்டு திட்டத்துக்கு ஒப்புதல் வழங்க வலியுறுத்தினார்.

ஜூலை 27 அன்று டெல்லியில் கர்நாடகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சி எம்.பி.க்களுடன் கூட்டம் நடத்தி, மேகேதாட்டு அணை கட்டக் கடைமடை மாநிலங்களின் அனுமதி தேவையில்லை என நாடாளுமன்றத்தில் ஒன்றிய ஜல்சக்தி துறை தெரிவித்த பதிலை மேற்கோள் காட்டிப் பேசியுள்ளார். அதே நாளில்,கர்நாடக அமைச்சர் ராமலிங்க ரெட்டி, கர்நாடக அரசின் டெல்லி பிரதிநிதி, கர்நாடக அரசின் தலைமை வழக்கறிஞர் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் மேகேதாட்டு அணை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தையும் நடத்தியுள்ளார்.

ஊடகங்களிடம் தொடர்ந்து மேகேதாட்டு அணையைக் கட்டியே தீருவோம் எனவும், தமிழ்நாடு அரசின் அனுமதி தேவையில்லை எனவும் கர்நாடக முதல்வர் பேசி வருகிறார். இதற்கு மாறாக, இவ்விவகாரத்தில் தமிழ்நாடு முதல்வர் பிரதமருக்குக் கடிதம் எழுதியதோடு தனது கடமை முடிந்துவிட்டது என மவுனம் காத்து வருகிறார். இதற்கிடையில், தமிழ்நாடு முதல்வர் கர்நாடகா சென்று பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என்று வேளாண் துறை அமைச்சர் சொன்னார். பின்னர் அவரும் இன்னும் சிலரும் இல்லை என்று மறுத்தார்கள். இப்போது தமிழ்நாடு சார்பில் சில விவகாரங்கள் தொடர்பாகத் தமிழ்நாடு முதல்வர் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளதாக, கர்நாடக முதல்வரே தெரிவித்துள்ளார். மேலும் இதுதொடர்பாக வரும் ஆகஸ்ட் 3-ஆம் தேதி தமிழ்நாடு முதல்வர் கர்நாடகா செல்வதாகவும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், காவிரியில் நமக்கு உரிய பங்கினை வழங்க காவிரி ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டும், அதனை நிறைவேற்ற முடியாது என்று கர்நாடக மாநில முதல்வர் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து,தமிழ்நாடு முதல்வர் இன்னும் வாய் திறக்காமல் இருக்கிறார். அதுமட்டுமல்ல, மேகேதாட்டு விவகாரம் தொடர்பாக ஒரு தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்று சட்டப்பேரவையின் மூலம் வலியுறுத்தி இருக்கின்ற நிலையில், இந்த கர்நாடக பயணம் இதனை நீர்த்துபோகச் செய்யாதா? என்ற கேள்வியும் எழுகிறது.

இப்படி இந்த அரசைப் பொறுத்தவரையில் எந்தத் தகவல்களிலும் தெளிவு இல்லை; எதிலும் வெளிப்படைத்தன்மை இல்லை. எதற்கெடுத்தாலும் குழப்பம்; எல்லாவற்றிலும் ஏமாற்றம். இதுவே இந்த அரசின் வழக்கமாக மாறியிருக்கிறது. தனது திரைப்படம் கர்நாடகாவில் வெளியாவதில் சிக்கல் ஏற்படக் கூடாது என்பதற்காகவே முதல்வர் இதுகுறித்து வெளிப்படையாகப் பேசாமல் அமைதி காப்பதாக ஊடகங்களில் ஓயாமல் செய்திகள் வெளியாகின்றன. அதற்கும் எந்தப் பதிலும் இல்லை.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தோடு, விவசாயச் சங்கப் பிரதிநிதிகளின் கூட்டத்தையும் கூட்டச் சொல்லி, முதல்வருக்கு ஆதரவு அளிக்கும் கட்சிகள் உட்பட தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகளும், விவசாயச் சங்கங்களும் அரசுக்குக் கோரிக்கை விடுத்தும் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அமைதி காத்து வருகிறார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## செயல்பாடுகள் மூலம் கற்றல்:
# தேவகோட்டை பள்ளி மாணவர்களுக்கு மூளைத்திறன் மேம்பாட்டு பயிற்சி



தேவகோட்டை: சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில், குழந்தைகள் தங்களது மூளையை சுறுசுறுப்பாகவும் சிந்தனைத்திறனை மேம்படுத்தியும் வைத்துக் கொள்வது குறித்து செயல்முறை விளக்கப் பயிற்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளி மாணவி ரித்திகா வரவேற்புரை வழங்கினார். பள்ளித் தலைமையாசிரியர் லெ.சொக்கலிங்கம் தலைமை தாங்கினார்.


காளையார்கோவில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் விரிவுரையாளர் முனைவர் உஷா, குழந்தைகளின் மூளைச் செயல்திறனை மேம்படுத்தும் பல்வேறு பயிற்சிகளை செயல்பாடுகள் மூலம் செய்து காண்பித்து விளக்கினார். மேலும், புதிய பாடத்திட்டத்தின்படி தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடங்களில் இடம்பெறும் பாடல்களை செயல்பாடுகளுடன் எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பதையும் மாதிரி வகுப்பின் மூலம் எடுத்துரைத்தார்.

வாசிப்பு இயக்கத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள 'உருளைக்கிழங்கு', 'பாப்பாவின் பாடம்' உள்ளிட்ட கதைகளை அசைவுகள் மற்றும் செயல்பாடுகளுடன் மாணவர்களுக்கு சுவாரஸ்யமாக விளக்கினார். அதேபோல், ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்கள் மற்றும் வாசிப்பு இயக்கத்தின் பல்வேறு செயல்பாடுகளையும் செய்து காண்பித்தார்.

சிறு வயதிலிருந்தே குழந்தைகள் விளையாட்டின் மூலம் எளிதாகவும் மகிழ்ச்சியுடனும் கற்றுக்கொள்ளும் முறைகள் குறித்து விளக்கப்பட்டன. பயிற்சியில் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்று, தாங்கள் கற்றவற்றை செயல்பாடுகள் மூலம் வெளிப்படுத்தினர். விரிவுரையாளர் முனைவர் உஷாவுடன் மாணவர்கள் அன்போடும் உற்சாகத்தோடும் கலந்துரையாடி பயனடைந்தனர். நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆசிரியர்களும் தங்களது பல்வேறு சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்று தெளிவு பெற்றனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆசிரியர் ஸ்ரீதர் சிறப்பாக செய்திருந்தார். நிறைவாக பள்ளி மாணவி ஹாசினி நன்றியுரை வழங்கினார்.

## தூத்துக்குடியில் பெருந்தலைவர் காமராஜரின் 124வது பிறந்த நாள் விழா
# பள்ளி மாணவர்களுக்கு நோட்புக், பள்ளிப் பைகள், பொதுமக்களுக்கு சேலை, பாத்திரங்கள் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கல்



தூத்துக்குடி பிரையண்ட் நகர் காமராஜர் நற்பணி மன்றம் மற்றும் ரத்ததான கழகம் சார்பில் பெருந்தலைவர் காமராஜரின் 124-வது பிறந்த நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு சுரேஷ் நாடார் தலைமைதாங்கினார். குணசேகரன் நாடார், சக்திவேல் நாடார், முருகேசன் நாடார், பொன்சிங் நாடார், நாகராஜன் நாடார், ராஜ்குமார் நாடார் பாக்யராஜ்நாடார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் சிறப்பு விருந்தினர்களாக திமுக வடக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதா ஜீவன், திமுக மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், சமத்துவ மக்கள் கழக மாவட்ட செயலாளர் மாலைசூடி அற்புதராஜ், மாநில தொழிற்சங்க செயலாளர் ஜெபராஜ் டேவிட், மாநில கலை இலக்கிய அணி செயலாளர் வழக்கறிஞர் அந்தோணி பிச்சை, மாவட்ட அவைத் தலைவர் கண்டிவேல், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் சிவசு முத்துக்குமார், மாவட்ட தொழிலாளர் அணி செயலாளர் சங்கர், 44-வது வார்டு செயலாளர் பொன்சுகுமார், ராஜன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் இசக்கிமுத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழாவையொட்டி மாணவ, மாணவிகளுக்கு இலவச நோட்புக் மற்றும் பள்ளிப் பைகள் வழங்கப்பட்டன. மேலும் ஏழை, எளிய மக்களுக்கு இலவச சேலைகள் மற்றும் பாத்திரங்கள் வழங்கப்பட்டதுடன், பொதுமக்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் திரளான பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் காமராஜர் நற்பணி மன்ற நிர்வாகிகள் கலந்துகொண்டு பெருந்தலைவர் காமராஜருக்கு மரியாதை செலுத்தினர்.

## ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் கீழ வீராணம் ஊராட்சியில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கிராம சபைக் கூட்டம்



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழ வீராணம் ஊராட்சி வளாகத்தில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கிராமசபைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு ஊராட்சி மன்றத் தலைவர் அ. வீரபாண்டியன் தலைமை தாங்கினார். ஊராட்சி செயலர் பாண்டியராஜ் கூட்டத் தீர்மானங்களை வாசித்தார்.

வீரகேரளம்புதூர் வட்டாட்சியர் ஆனந்த், ஒன்றிய பணி மேற்பார்வையாளர் ஞானபிராகாசி முன்னிலை வகித்தார்.

நிகழ்வில் வீகே புதூர் உதவி காவல் ஆய்வாளர் சேகனா, சுகாதார ஆய்வாளர் ஷியாம் டேனியல், குறுவட்ட வருவாய் ஆய்வாளர் முத்துகுமார்,

கிராமநிர்வாக அலுவலர் சுதர்சன பாண்டியன், கிராம உதவியாளர் முருகராஜ், ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் சாகுல் ஹமீது, புஷ்பா, அனிபா, அங்கன்வாடி பணியாளர்கள் பூங்கோதை, மல்லிகா, தாஜ் நிசா, ஆனந்தி

நீர்பான கமிட்டி தலைவர் முத்து பாண்டியன், நடராஜன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கிராம சபைக் கூட்டத்தில் பொதுமக்களின் கருத்துகள் கேட்கப்பட்டதுடன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தூய்மை, மரக்கன்றுகள் நடுதல் மற்றும் ஊரக வளர்ச்சி தொடர்பான பல்வேறு தீர்மானங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. தொடந்து தொகை கணக்கெடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது



கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி ஷஹ்னாஸ் மற்றும் திருக்கோவிலூர் உட்கோட்ட டிஎஸ்பி பார்த்திபன் அவர்கள் பள்ளி மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்படுத்தினார், அப்பொழுது அங்கு பயின்றவரும் பள்ளி மாணவர்கள் மூன்று நபர்கள் காலணிகள் இல்லாமல் இருந்தனர், அதனைக் கண்ட மாவட்ட எஸ்பி பள்ளி மாணவர்களுக்கு உடனடியாக காலணிகளை வாங்கி கொடுத்து நன்றாக படிக்க வேண்டும் வாழ்வில் முன்னேற வேண்டும் என பள்ளி மாணவர்களுக்கு நெகிழ்ச்சியே ஏற்படுத்திய சம்பவம் பள்ளி மாணவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு பெற்றுள்ளது

# வாலாஜாவில் இந்து மக்கள் கட்சி சார்பில் விநாயகர் சதுர்த்தி ஆலோசனைக் கூட்டம்
## பிரம்மாண்ட விநாயகர் ஊர்வலம் நடத்த தீர்மானம்



இந்து மக்கள் கட்சியின் சார்பில், வாலாஜாவில் 3-ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வேலூர் கோட்டத் தலைவர் எஸ். கே. மோகன் தலைமை தாங்கினார்.

சிறப்பு அழைப்பாளர்களாக இந்து மக்கள் கட்சியின் வழக்கறிஞர் பிரிவு வேலூர் மண்டலத் தலைவர் சுதாகர் பாபு மற்றும் மாவட்டத் தலைவர் கோபால கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர்.

கூட்டத்தில், இந்த ஆண்டு வாலாஜா முழுவதும் இந்து மக்கள் கட்சி சார்பில் அதிக எண்ணிக்கையில் விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்து, பிரம்மாண்டமான விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தை நடத்துவது என முக்கிய தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் சம்பத், மாவட்ட செயலாளர் பார்த்திபன், ஆன்மீக பிரிவு மாவட்டத் தலைவர் ஸ்ரீதர், வாலாஜா கிழக்கு ஒன்றியத் தலைவர் அன்பழகன், வாலாஜா ஒன்றிய பொதுச் செயலாளர் குமார், வாலாஜா மேற்கு ஒன்றியத் தலைவர் பிரபாகரன், வாலாஜா ஒன்றிய செயலாளர் மணிவண்ணன், வாலாஜா இளைஞரணி தலைவர் கிருஷ்ணகுமார், இளைஞரணி துணைத் தலைவர் கார்த்தி, அம்மூர் பேரூராட்சி தலைவர் ஐயப்பன், ஆற்காடு சன்னியாசி மேடம் கிளைத் தலைவர் கார்த்தி, சோளிங்கர் கிளைத் தலைவர் பாஸ்கரன், கீழ்விஷாரம் கட்சி பொறுப்பாளர் பாஸ்கர் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் இருந்து கேரளம் மாநிலத்திற்கு
## கனிம வளங்கள் கொண்டு செல்லப்படுவதை மூன்று மாதங்களுக்கு தற்காலிகமாகத் தடை கடையநல்லூர் தொகுதி மக்கள் சார்பில் நன்றி



தமிழ்நாட்டில் இருந்து கேரளம் மாநிலத்திற்கு கனிம வளங்கள் கொண்டு செல்லப்படுவதை மூன்று மாதங்களுக்குதற்காலிகமாகத்தடைசெய்ததமிழ்நாடு முதல்அமைச்சர் அவர்களுக்கும், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும், இதனால் பெரும்பாதிப்பிற்கு உள்ளானகடையநல்லூர்தொகுதிமக்கள்சார்பிலும், தென்காசி, திருநெல்வேலி மாவட்ட மக்கள் சார்பிலும் (29.07.2026) பிற்பகல் 2 மணிக்குதலைமைச் செயலகத்தில் துறை அமைச்சர் டாக்டர் பிரபு அவர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தேன்.

இத்தடையை நிரந்தரமாக்குமாறும், உள்நாட்டிலேயே முழுமையாக விற்பனை செய்யப்படும் ஜல்லிகள் உள்ளிட்ட கனிமங்களுக்கு கட்டுபடியான விலையை அதன் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களிடம் பேசி நிர்ணயம் செய்யுமாறும் கேட்டுக் கொண்டேன். நீங்கள் இப்பிரச்னையை தொடர்ந்து என்னிடம் வலியுறுத்தி வந்தீர்கள் என என்னிடம் நினைவு படுத்தி மகிழ்ந்தார் அமைச்சர்.

அன்புடன், தி.மு.இராசேந்திரன், சட்டமன்ற உறுப்பினர், கடையநல்லூர்

## மதுரையில் மூன்று நாட்கள் நடைபெறும் அகில இந்திய மார்பக நோய் சிகிச்சை நிபுணர்கள் சங்க மாநில மாநாடு



அகில இந்திய மார்பகநோய் சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் மாநில மாநாடு, மதுரையில் ஜூலை 31 முதல் ஆகஸ்ட் 2 வரை மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் மார்பக நோய்களுக்கான புதிய சிகிச்சை முறைகள், மருத்துவ தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் நோய் விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன. ஆகஸ்ட் 1-ஆம் தேதி மாநாட்டு அமைப்பாளர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் மாநாட்டின் நோக்கம், சிறப்பம்சங்கள் குறித்து விளக்கமளிக்க உள்ளனர்.

மேலும், மருத்துவர்கள், அறுவைசிகிச்சைநிபுணர்கள் மற்றும் பல்வேறு துறை வல்லுநர்கள் பங்கேற்கும் அறிவியல் அமர்வுகள், கலந்துரையாடல்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளும் மாநாட்டின் முக்கிய அம்சங்களாக இடம்பெறுகின்றன. மேலும் மாலை 7.30 மணியளவில் இசை நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது. மாநாட்டில் பங்கேற்கும் மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொதுமக்கள் புதிய சிகிச்சை முறைகள், மருத்துவ முன்னேற்றங்கள் குறித்து பயனுள்ள தகவல்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்கும் என மதுரை மாவட்ட நீதிமன்றம் அருகே உள்ள மோகன் மருத்துவமனையில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அமைப்பு தலைவர் மோகன்பிரசாத் அமைப்புச் செயலாளர் சதீஷ்குமார் தெரிவித்தனர்

# ஆசிரியர்கள் அனைவரையும் சிறப்பு தகுதி நடத்தி காலமுறை ஊதியத்தில் கொண்டு வரவேண்டும்



தேர்வைவிட மிகக்கடினமாக இருந்தது. 12ஆம் வகுப்பு மாணவர்களைக் கையாளும் ஆசிரியர்களிடம் கேட்கப்பட வேண்டிய கேள்விகள் இதில் கேட்கப்பட்டிருந்தன. இடைநிலை ஆசிரியர்கள் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரையிலும், பட்டதாரி ஆசிரியர்கள் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரையிலும் உள்ள மாணவர்களைக் கையாளுபவர்கள் என்பதை வினாத்தாள் வடிவமைப்பாளர்கள் அறியாமல் வடிவமைத்துள்ளனர். இருபது ஆண்டுகளாக ஒரே பாடத்தைப் பயிற்றுவித்து வரும் ஆசிரியர்கள் எப்படி இது போன்ற வினாக்களுக்கு விடையளிக்க முடியும்? இது எப்படி இருக்கிறது என்றால், தொடர்ந்து பயிற்சியில் இருக்கும் இளைஞர்களுக்கு 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் ஒரு குறிப்பிட்ட வினாடிக்குள் இலக்கைஅடைய வேண்டும் என்று நேரத்தை நிர்ணயம் செய்து, அந்த இலக்கை அடைந்தால்தான் வெற்றி பெற முடியும் என்ற விதியை ஏற்படுத்திப் போட்டியை நடத்துவது போன்றதாகும். அது இளைஞர்களுக்குச் சாத்தியம். ஆனால், அதே போன்ற விதியை நிர்ணயம் செய்து, 50 வயதிற்கு மேல் உள்ளவர்களையும், தொடர் பயிற்சியில் உள்ள இளைஞர்களுக்கு நிர்ணயித்த அதே வினாடிக்குள் ஓடி முடிக்க வேண்டும்; அப்படி ஓடி முடித்தா ல்தான் வெற்றி பெற முடியும் என்று சொல்வதைப் போன்றுதான் இப்போது நடந்த சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு இருக்கிறது. எனவே, ஏற்கனவே அனைத்து ஆசிரியர் சங்கங்களும் வைத்த கோரிக்கையின் அடிப்படையில், சராசரியாக 40 விழுக்காடு மதிப்பெண்ணைத் தேர்ச்சி மதிப்பெண்ணாக நிர்ணயம் செய்ய வேண்டும். அதில் 20 விழுக்காடு மதிப்பெண்ணைப் பணிமூப்பு மற்றும் ஆசிரியர்களின் கற்பித்தல் செய்முறைக்காக வழங்கி, தேர்வு எழுதிய ஆசிரியர்கள் அனைவரையும் வெற்றி பெறச் செய்ய வேண்டும்

12 ஆயிரம் பகுதிநேர சிறப்பாசிரியர்கள் 13 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வருகிறார்கள் அவர்கள் அனைவரையும் சிறப்பு தகுதி நடத்தி காலமுறை ஊதியத்தில் கொண்டு வரவேண்டும் காலத்தாமதம் ஏற்படும் பட்சத்தில் பணி நிரந்தரம் செய்யும் வரை அவர்கள் அனைவரையும் வாரத்தில் அனைத்து வேலை நாட்களும் பணியாற்றும் பொருட்டு ஆணை வழங்கி மாதம் ரூ. 25.000/- ஊதியம் வழங்க வேண்டும் கடந்த 15 ஆண்டுகளாக சம வேலைக்கு சம ஊதியம் கேட்டு போராடும் இடைநிலை ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்று ஊதிய முரண்பாட்டைசரிசெய்து ஊதியம் வழங்க வேண்டும், மேலும் கடந்த ஆட்சியில் சம வேலைக்கு சம ஊதியம் வழங்க காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை நடத்தினர் அப்போது ஊதியம் பிடித்தம் செய்யப்பட்டது , பிடித்தம் செய்யப்பட்ட நாட்களை ஈடு செய்யும் பொருட்டு ஈட்டிய விடுப்பாக கருதி ஊதியம் வழங்க வேண்டும்

ஏழை அவசு பள்ளிகளில் முழுக்க முழுக்க ஏழ்மையில் பெற்றோர்கள் தின கூலியாக பணியாற்றுவதால் மாணவர்கள் பள்ளிகளில.நடக்கும் காலாண்டுஅரையாண்டு திருப்புதல் தேர்வு ,பருவத் தேர்வுகள் கட்டணத்தை செலுத்த மாணவர்கள் இயலாது மிகவும் சிரமம் படுகிறார்கள் வினாத்தாள் மற்றும் விடைத்தாள் கட்டணத்தை முழுவதுமாக ரத்து செய்து மாணவர்களுக்கு உதவிட வேண்டும்

பல பள்ளிகளில் பல ஆண்டுகள் முன்னர் கட்டப்பட்ட கட்டடங்கள் இடியும் நிலையிலும் வளாகத்தில் வரைமுறையின்றி மாணவர்கள் கண்காணிக்க முடியாத நிலையில் உள்ள கட்டடங்களை இடித்து ஒரே சீரான பள்ளி வளாகத்தில் மாணவர்கள் எங்கு சென்றாலும் ஆசிரியர்கள் பார்வையில் படுகின்ற அளவிற்கு வளாகம் இருப்பதை உறுதி செய்து உதவிட வேண்டும் மேற்கண்ட கோரிக்கைகளை பரிசீலனை செய்து தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு ச.ஜோசப் விஜய் சமூக நீதி ஆட்சியில் நிறைவேற்றி கொடுக்க பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் ஆ.ராஜ்மோகன் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சா.அருணன் நிறுவனத் தலைவர், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு

# வணிகக் கப்பல்கள் அத்துமீறி நுழைவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கனிமொழி எம்.பி.யை சந்தித்த நாட்டுப்படகு மற்றும் பைபர் படகு மீனவர்கள் நலச்சங்க நிர்வாகிகள் பல்வேறு கோரிக்கை



தூத்துக்குடி மாவட்ட நாட்டுப்படகு மற்றும் பைபர் படகு மீனவர்கள் நலச்சங்கம் சார்பில், தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழியை நேரில் சந்தித்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனு அளிக்கப்பட்டது.

அந்த மனுவில், தூத்துக்குடிதுறைமுகத்திற்கு வரும் வணிகக் கப்பல்கள்,பாரம்பரிய மீனவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளபிரத்யேகமீன்பிடி மண்டலப் பகுதிக்குள் (Demarcated Fishing Zone Area – F.No.M–89/ 1/2003–S/D.2577) அத்துமீறி நுழைந்து மீன்பிடித் தொழிலுக்கு இடையூறு ஏற்படுத்துவதோடு, மீனவர்களின் உயிர் பாதுகாப்புமற்றும்வாழ்வாதாரத்தையும் கேள்விக்குறியாக்கும் வகையில் விபத்து அபாயங்களை உருவாக்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பாரம்பரிய மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், வணிகக் கப்பல்கள் மீன்பிடி மண்டலத்திற்குள் நுழைவதைத்தடுக்கவும், சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் உடனடி நடவடிக்கை எடுக்கமத்திய அரசு மற்றும் துறைமுக நிர்வாகத்திடம் வலியுறுத்துமாறு எம்.பி. கனிமொழியிடம் கோரிக்கை விடுக்க ப்பட்டது. தொடர்ந்து மீனவர்களின் நலன் கருதி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி எம்.பி உறுதி அளித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, தூத்துக்குடி மாவட்ட நாட்டுப்படகு மற்றும்பைபர்படகுமீனவர்கள் நலச்சங்க மாவட்ட தலைவர் ஆர். வினோஜ், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் டி. தாமஸ் மற்றும் பாண்டியாபதி பரதர் நலச்சங்க தலைவர்இன்னாசிஆகியோர் உடனிருந்தனர்.



# அனைத்து பகுதிகளுக்கும் பாரபட்சமின்றி சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது

## மேயர் ஜெகன் பெரியசாமி தகவல்

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பி&டி காலனி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்று வரும் புதிய தார்ச்சாலை அமைக்கும் பணிகளை மேயர் ஜெகன் பெரியசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தூத்துக்குடி மாநகராட்சி கடந்த 2008–ஆம் ஆண்டு அப்போதைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க. ஸ்டாலின் முயற்சியால், மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான ஆட்சியில் 10–வது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.அப்போது 5 ஊராட்சி பகுதிகள் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டன. அதன் பின்னர் 10 ஆண்டுகள் அதிமுக ஆட்சியில் போதிய கட்டமைப்பு பணிகள் நடைபெறவில்லை என்றார்.

2021–ஆம் ஆண்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் திமுக அரசு பொறுப்பேற்று, உள்ளாட்சித் தேர்தலுக்குப் பிறகு 60 வார்டுகளைக் கொண்ட மாநகராட்சியின் அனைத்து பகுதிகளிலும் தேவைகள் பட்டியலிடப்பட்டு, முதற்கட்டமாக பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களை இணைக்கும் சாலைகள் மேம்படுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பிரதான சாலைகள் மட்டுமின்றி, குறுகிய தெருக்கள் மற்றும் சந்துகளிலும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கப்பட்டு, ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு புதிய வழித்தடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதுவரை சுமார் 4,300 சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். மக்களின் கோரிக்கைகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் எந்தவித பாரபட்சமும் இன்றி சாலைகள் சீரமைக்கப்பட்டு, பல இடங்களில் விரிவுபடுத்த ப்பட்டு,'எண்ட் டூ எண்ட்' (End–to–End) சாலைத் திட்டம் செயல்படுத்தப்பட்டதால் போக்குவரத்து நெரிசல் குறைந்து, மக்கள் சிரமமின்றி பயணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக மேயர் தெரிவித்தார். மேலும், மழைக்காலங்களில் நீர் தேங்கும் பகுதிகளிலும் நிரந்தர தீர்வு ஏற்படுத்தும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மக்கள் பிரதிநிதிகள், மாநகராட்சி ஆணையர் மற்றும் அலுவலர்களுடன் இணைந்து பொதுமக்களின் கருத்துகளை கருத்தில் கொண்டுதொடர்ந்துஅடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார். புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும் தேவையான அடிப்படைவசதிகள்செய்து தரப்பட்டு வருவதாகவும், பொதுமக்கள் தங்களது குறைகளை நேரடியாக தெரிவிக்கலாம் என்றும், "சாலையில்லாத மாநகராட்சி அல்ல, போக்குவரத்து நெரிசல் இல்லாத தூத்துக்குடியை உருவாக்குவதே எங்களின் இலக்கு" என மேயர் ஜெகன் பெரியசாமி தெரிவித்தார். 15வது வார்டு கவுன்சிலர் இசக்கிராஜா, செயற்குழு உறுப்பினர் ராஜா, போல்பேட்டை பகுதி பிரதிநிதி ஜேஸ்பர், மாநகராட்சி அலுவலர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### கோவையில் நோட்டரி வழக்கறிஞராக பொறுப்பேற்றுள்ள வழக்கறிஞர் புஸ்பாணந்தம்,

# தமிழகம் முழுவதும் மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச நோட்டரி கையெழுத்து போடுவதாக உறுதி



கோவை மாவட்டம் சிவாஜி காலனி பகுதியில் வழக்கறிஞர்புஸ்பாணந்தம் அலுவலகம் செயல்பட்டு வருகின்றது. இங்கு கூறியதாவது

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் பகுதியில் பிறந்து, கடந்த 20 ஆண்டுகளுக்கு முன் கோவை வந்த இவர், கடந்த 15 ஆண்டு களுக்கும் மேலாக சமூக சேவையாற்றி வருகின்றார். மேலும் இலவச சட்ட ஆலோசனை வழங்குதல், மரகன்றுகள் வழங்குதல், முதியோர் காப்பத்திற்க்கு உடை மற்றும் பொருளுதவி செய்து வருகிறார். மேலும் படிக்க வசதிகள் இல்லாத குழந்தைகளுக்கு மற்றும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு, கல்லூரி கட்டணம் செலுத்துதல், உள்ளிட்ட பல்வேறு சமூக பணிகளை, அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை என்ற அமைப்பின் மூலமாக செய்து வருகின்றார் கோவையில் உள்ள பல்வேறு சமூக அமைப்பு இவருக்கு பல்வேறு சேவை விருதுகளை வழங்கியுள்ளது. தற்போது கடந்த 13.07.2026 ம் தேதி முதல் மத்திய அரசின் நோட்டரி வழக்கறிஞராக நியமித்துள்ளனர். நோட்டரிவழக்கறிஞராகதான்பொறுப்பேற்றதை தொடர்ந்து தான், உலகம் முழுவதும் மாற்றுதிறனாளிகளுக்குநோட்டரிகையேழுத்து முற்றிலும் இலவசமாக போட்டு தருவதாக உறுதியளித்த்ள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஞானபீடம் விருது பெற்ற கவிப்பேரரசு வைரமுத்து சென்னையில் இருந்து மதுரை விமான நிலையம் வருகை



தமிழில் வந்து செம்மொழினு சொல்லிட்டு பலவிதமான பெருமையா இருந்திருக்கிறோம்,நீண்ட இடைவெளிக்குப் பின் ஞானபீட விருது கிடைச்சிருக்கு, பற்றிய கேள்விக்கு

ஞானபீட விருது என்பது, இந்தியாவின் தேசிய மொழிகளில் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு விருது என்று வழங்கப்படுவது.

சாகித்திய அகாடமி ஆண்டுக்குஆண்டுவழங்கப்படுவது. 22 மொழிகளுக்கும் வழங்கப்படுவது சாகித்திய அகாடமி.

ஆனால், 22 மொழிகளில் ஒரு மொழியை மட்டும்தேர்ந்தெடுத்துவழங்கப்படுவது ஞானபீடம். அதனால்தான் ஒவ்வொரு மொழிக்கும் அது தாமதமாகிறது. குறிப்பாகத் தமிழுக்கு மிகத் தாமதமாகியிருக்கிறது.

முதல் விருது 1975–இல் அகிலனுக்குவழங்கப்பட்டது. இரண்டாம் விருது 27 ஆண்டுகளுக்குப் பிறகு 2002–இல் ஜெயகாந்தனுக்கு வழங்கப்பட்டது. மூன்றாவது விருது 24 ஆண்டுகளுக்குப் பின்னர் வைரமுத்துவிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. மற்ற மொழிகளெல்லாம், இந்தி மொழியெல்லாம் 12, கன்னடம் 6, மலையாளம் 6 என்றுஅதிகவிருதுகளைப் பெற்றுள்ள நிலையில், செம்மொழியாகிய தமிழ், மூத்தமொழியாகியதமிழ், உலகத்தின் பண்பாடுகளுக்கெல்லாம் பங்களிப்புச் செய்த தமிழ், மூன்றுதான் பெற்றிருக்கிறது என்பது தமிழர்களின் தவக் குறை என்று நான் வருந்துகிறேன். ஆனாலும், கால் நூற்றாண்டிற்குப் பிறகு ஒரு தமிழ் கவிஞருக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்ற விருதை, நான் எனக்கு மட்டுமேயான விருதாகக் கருதவில்லை. இந்த விருதை தமிழ் மண்ணுக்கும் மக்களுக்கும் அன்றே காணிக்கையாக்கியிருக்கிறேன். இதோ, ஞானபீடம் விருது பெற்று மதுரை மண்ணுக்கு முதன்முதல் வருகிறேன். இவர்களின் கோலாகலத்தைப் பாருங்கள், கொண்டாட்டத்தைப் பாருங்கள், முகத்தில் மின்னும் மலர்ச்சியைப் பாருங்கள், கண்ணில் ஒளிரும் மின்னலைப் பாருங்கள்.

இந்த விருது தங்களுக்கெல்லாம் வழங்கப்பட்டதாகத் தமிழ் சமுதாயம் கருதுகிறது.என்னை இந்த விருதுக்குத் தகுதிப்படுத்திய என் ஆசான்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், தலைவர்கள், ஒவ்வொரு சமூக மனிதனுக்கும் இந்த விருதை நான் காணிக்கையாக்குகிறேன். நன்றி சொல்லுகிறேன்.நான்தமிழ்மொழி மட்டுமே தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட வேண்டும் என்று கேட்கிற குறுகிய வட்டத்தைச் சார்ந்தவன் அல்ல. இந்தியாவில் பேசப்படும் எல்லா தேசிய மொழிகளும் முதலில் அந்தந்த மாநிலங்களில் முதல் வாழ்த்தாகப் பாடப்பட்ட பிறகுதான் தேசகீதமும் தேசிய கீதமும் இடம்பெற வேண்டும் என்று விரும்புகிறவர்கள் நாங்கள்.

எங்கள் மொழி வாழ்த்து முதலில் டெல்லியில் ஒலிக்கப்பட முடியாது. எங்கள் மொழி வாழ்த்து கன்னடத்தில் ஒலிக்கப்பட முடியாது. எங்கள் மொழி வாழ்த்து மலையாளத்தில் ஒலிக்கப்பட முடியாது. தாய் தமிழ்நாட்டு எல்லைக்குள் மட்டும்தான் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் ஒலிக்கப்படக்கூடிய உரிமையை நாங்கள் பெற்றிருக்கிறோம். அதுதான் மரபு! அப்படித்தான் வந்திருந்தது.

இந்தத் தமிழ்த்தாய் வாழ்த்தைத் தேர்ந்தெடுத்து, இசையமைத்து, பாடக்கூடிய உரிமையை எங்களுக்குப் பெற்றுக் கொடுத்த கலைஞரை(கருணாநிதி) இந்த நேரத்தில் நாங்கள் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறோம். எனவே ஒன்றிய அரசுக்கு ஒரு வேண்டுகோள்... அந்தந்த மாநிலங்களின் மொழி உரிமையை நீங்கள் பாதுகாத்துத் தர வேண்டும், அப்போது இந்தியாவின் இறையாண்மை இன்னும் மேம்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

### மதுக்கரை காவல்நிலையத்தில் புதிய நூலகம் திறப்பு விழா

# கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பவன் குமார் ரெட்டி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்



கோவை மாவட்டம், மதுக்கரை காவல்நிலையத்தில், டாக்டர் கலாம் பவுண்டேஷன்பங்களிப்புடன் புதிதாக அமைக்கப்பட்ட நூலகத்தை பள்ளி மாணவர்களுடன் இணைந்து, கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பவன் குமார் ரெட்டி திறந்து வைத்தார். இதை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய கலாம் பவுண்டேஷன் உறுப்பினர் ஆகாஷ், கூறியதாவது.. எங்களுடைய கலாம் பவுண்டேஷன் சார்பாக கோவை மாவட்டத்தில் 6 இடங்களில் ஆறு விதமான புதிய நூலகங்கள் வைத்துள்ளோம். ஆட்டோக்கள் மற்றும் கோவை விமான நிலையம், பாஸ்போர்ட் அலுவலகம், உள்ளிட்ட இடங்களில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நூலகம் வைத்துள்ளோம். மேலும் அப்துல் கலாமின் அறிவு சார்ந்த திட்டத்தில் குழந்தைகள் புத்தகங்களைப் படித்து அறிவாற்றல் மிகுந்த குழந்தைகளாக வளர வேண்டும், என்பது அவரது முக்கிய நோக்கமாக இருந்தது. அதன் முன்னெடுப்பாக காவல் நிலையத்துக்கு வரும் பொதுமக்களின் நேரத்தை பயனுள்ளதாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கோவை மாவட்டத்திலே முதல்முறையாக மதுக்கரை காவல் நிலையத்தில் நூலகம் திறக்கப்பட்டு ள்ளது. எங்களின் இந்த முயற்சிக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பவன்குமார் ரெட்டி உறுதுணையாக இருந்தார். மேலும் கோவை மாவட்டத்தில் உள்ள 34 காவல் நிலையத்திலும் இதுபோன்ற நூலகம் அமைக்க பணிகள் நடைபெற்று வருகிறது. ஆறு மாத காலத்திற்குள் அரசுப்பள்ளி களில் "வெயிட்டிங் ரூம்" என்ற பெயரில் நூலகம் அமைக்கும் பணியை முன்னெடுத்துள்ளோம். அந்த நூலகத்தில் தலைவர்களின் வாழ்க்கை வரலாறு,யூபிஎஸ்இ போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள் வைக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.பின்னர் இந்தநிகழ்ச்சிக்கு அழைத்து வரப்பட்ட தனியார் பள்ளி மாணவர்கள், காவல் கண்காணிப்பாளருக்கு பூங்குத்துக் கொடுத்து வரவேற்று, அவர்களுடன் கலந்துரையிடினார். பின்னர் பள்ளி மாணவர்களுக்கு காவல் நிலையத்தில் நாள்தோறும் நடக்கும் நடவடிக்கைகளை மதுக்கரை காவல்ஆய்வாளர்செயல்முறை விளக்கம் அளித்தார். இதைத் தொடர்ந்து பள்ளி மாணவர்களுக்கு புத்தகம் படிப்பதன் அவசியத்தினை விளக்கினர். தொடர்ந்து பேசிய மாணவர்கள், காவல் நிலையம் வந்த அனுபவம் எங்களுக்கு மிகவும் புதியதாக இருந்தது, காவல் நிலையத்தில் எப்படி புகார் அளிக்கவேண்டும்.காவல் நிலையம் எப்படி செயல்படுகிறது, காவல்நிலைத்தில் காவலர்கள் எந்தெந்த பணியை செய்கின்றனர். ஆயுதங்களை எப்படி பயன்படுத்த வேண்டும், என்பது குறித்த விளக்கங்களை அளித்தது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் கலாம் பவுண்டேஷன் உறுப்பினர்கள், உதவி ஆணையர் சுரேஷ், மதுக்கரை காவல் ஆய்வாளர் ராஜேந்திர பிரசாத், உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் மற்றும் தனியார் பள்ளி தலைமையாசிரியர், மாணவ, மாணவியர் பலர் கலந்து கொண்டனர்.

# கீழ வீராணம் ஊராட்சியில் உலக மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிக்கான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரம் வழங்கும் நிகழ்ச்சி



தென்காசிமாவட்டம்,ஆலங்குளம்ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழ வீராணம் ஊராட்சியில், உலக மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியை முன்னிட்டு பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் அ. வீரபாண்டியன் தலைமை தாங்கினார். வீரகேரளம்பு தூர் வட்டாட்சியர் ஆனந்த் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு உலக மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த துண்டுப் பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் ஒன்றிய பணி மேற்பார்வையாளர் ஞானபிரகாசி, ஊராட்சி செயலர் பாண்டியராஜ், வீ.கே.புதூர் உதவி காவல் ஆய்வாளர் சேகனா, சுகாதார ஆய்வாளர் ஷியாம் டேனியல், குறுவட்ட வருவாய் ஆய்வாளர் முத்துகுமார், கிராம நிர்வாக அலுவலர் சுதர்சன பாண்டியன், கிராம உதவியாளர் முருகராஜ், ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் சாகுல்ஹமீது,புஷ்பா, அனிபா, அங்கன்வாடி பணியாளர்கள் பூங்கோதை, மல்லிகா, தாஜ் நிசா, ஆனந்தி, நீர்பானக்குழுத்தலைவர் முத்துபாண்டியன், நடராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்




1

EXECUTIVE SUMMARY & THE VISIONARY MANDATE

The World Siddha Foundation (WSF) is initializing a historic, high-vibrational ecosystem across 150 acres of land. This project is a multi-dimensional synthesis of ancient Siddha wisdom, monumental architecture, world-class medical tourism, and automated public charity

WSF builds a self-sustaining spiritual infrastructure city. By creating a highly restrictive, ultra-exclusive wellness layer for the top 0.1% of global earners, we generate an indestructible, recurring operational surplus. This surplus completely funds, guarantees, and scales our massive public welfare initiatives—including an eternal 24/7/365 free food kitchen (Annadhana Koodam) and a free state-of-the-art holistic hospital.



# உலக இயற்கை பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு சர்வதேச சமூக மேம்பாட்டு அமைப்பு நடத்திய வால்க் பார் நேச்சர் பெண்கள் விழிப்புணர்வு நடைப்பயணம்

உலக இயற்கை பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, சர்வதேச சமூக பற்றிய நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது. இந்த நிகழ்ச்சியினை கல்லூ- சுபத்ராமோகன்ராஜ், மற்றும் ஐ.எஸ்.டி.ஓ மாநிலத் தலைவர் லாசர்



மேம்பாடு அமைப்பு நடத்திய, வால்க் பார் நேச்சர் எனும் பெண்கள் விழிப்புணர்வு நடைப்பயணம் மற்றும் ஹேப்பி பீரியட்ஸ் நிகழ்வின் எட்டாவது நிறைவு விழா கோவையில் உள்ள நிர்மலா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி கடந்த மார்ச் மாதம்,எட்டாம் தேதியில் துவங்கி பல்வேறு மாவட்டங்களில் உள்ள கல்வி நிறுவனங்கள், கிராமங்கள், தொழில் நிறுவனங்களில், உள்ள சுமார் 30,000 பெண்களுக்கு பெண்களின் மாதவிடாய், சுகாதார விழிப்புணர்வு, இயற்கை பாதுகாப்பு அவசியம், ரியின் செயலர் டாக்டர் குழந்தை தெரஸ் வழிகாட்டுதலின்படி,கல்லூரியில் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் தலைமை ஆசிரியர் டாக்டர் மேரி பபியோலா, ஆர்த்திடா குழுமத்தின் தலைவர் நீனா ஆர்த்திடா, பிடிஜி அறக்கட்டளை, மனிதவள மேம்பாட்டு நிர்வாகி சரண்யா பிரியா, ஹேப்பி பீரியட்ஸ் சாய் குமார், டிரஸ்ட் மேட் மருத்துவமனை டாக்டர் உத்ரா பிரியதர்ஷினி, ரியல் ரேலியப் இந்தியா நிறுவனத்தின் நிறுவனர் கார்த்திக்தங்கவேல்,கோ பேட் நிறுவனர் ராஜன்,ஆகியோர்கலந்து கொண்டனர். நிகழ்வில் மாணவிகள் உற்சாகமாக பங்கேற்று இயற்கையை பாதுகாப்போம், பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைப்போம், மாதவிடாய் சுகாதாரத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவோம், என்ற உறுதி மொழியை ஏற்றுக்கொண்டனர், இயற்கையையும், ஆரோக்கியத்தையும் பாதுகாப்பது அனைவரின் பொறுப்பு என்ற மைய கருத்தும் வெளியிடப்பட்டது. இந்த விழா சமூகத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு முக்கிய முயற்சியாக அமைந்தது.



ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் உள்ள உடற்பயிற்சி கூடத்தினை மாண்புமிகு மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் த.சரத்குமார் நேற்று (30.07.2026) நேரில் பார்வையிட்டு, அலுவலர்களுடன் வழங்கப்படும் பயிற்சி குறித்து கலந்துரையாடினார்.உடன் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி இயக்குநர் மரு.ராதாகிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலைய கூட்டரங்கில் மாண்புமிகு மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் த.சரத்குமார் தலைமையில் அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நேற்று (30.07.2026) நடைபெற்றது. உடன் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி இயக்குநர் மரு.ராதாகிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், கருங்கல்பாளையம் காமராஜர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள இளைஞர் மேம்பாட்டு மையம் (நூலகம் மற்றும் அறிவுசார் மையம்)த்தினை மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் த.சரத்குமார் நேற்று (30.07.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.உடன் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித்ஜெயின் உட்பட பலர் உள்ளனர்.

# Delhi govt closes NEET protest cases with caveat: No protection for those with criminal antecedents

*The Delhi government on Thursday announced that it will not pursue any further adverse legal action against people involved in protests over the alleged irregularities in the NEET (UG) examination, while making it clear that the relief will not extend to those with criminal antecedents.*



The cases were filed against those who police found were involved in the violence that broke out during Cockroach Janta Party's (CJP) 'Chalo Sansad' march from Jantar Mantar on July 20.

Delhi Police identified 2,873 people through CCTV footage who allegedly attacked police personnel and vandalised vehicles during the CJP Chalo Sansad march. Of them, nearly a thousand were found to have criminal records, HT reported earlier, citing Delhi police officials familiar with the matter. According to a press release issued by the Delhi government's Home Department, a total of 13 cases were registered by Delhi Police in connection with the NEET protest demonstrations held in the national capital.

"No adverse legal action will be taken by any of the Police authorities within NCT of Delhi against those persons who have been involved in these protests. The protection, however, shall not extend to persons having criminal antecedents, as mandated in the order of Hon'ble Supreme Court mentioned above," the statement said. The government also directed that where arrests or detentions had already been made in these cases, the review process for releasing those arrested would be undertaken expeditiously. It further said it does not propose to take any further adverse action against individuals involved in the protests and that the matter would be treated as closed without any future proceedings on this account. The order was issued with the approval of the Lieutenant Governor of Delhi.

Centre had assured protesters that no legal or police action would be taken against students and volunteers who participated in demonstrations against the alleged NEET paper leak. The CJP-led agitation began last month after the NEET (UG) examination was scrapped over allegations of widespread irregularities. Protesters demanded sweeping reforms to the examination system and the resignation of then education minister Dharmendra Pradhan. The movement, centred around Delhi's Jantar Mantar, gathered momentum after activist Sonam Wangchuk joined it with an indefinite hunger strike.



ஈரோடு மாவட்ட முன்னாள் படைவீரர் அலுவலகத்தில் முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையினை மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் த.சரத்குமார் நேற்று (30.07.2026) வழங்கினார்.



ஈரோடு மாவட்ட முன்னாள் படைவீரர் அலுவலகத்தில் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் த.சரத்குமார் (30.07.2026) களஆய்வு மேற்கொண்டார்.



இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 நடைபெறுவதையொட்டி ஈரோடு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் முதன்மை மாவட்ட நீதிபதி எஸ்.சமீனா முன்னிலையில் நீதிமன்றத்தில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மக்கள் தொகை சுய கணக்கெடுப்பு தொடர்பான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

# மேகதாது அணைக்கு எதிராக ராகுல் பேசினால் தே.ஜ கூட்டணியில் இருந்து விலகுகிறோம்; அன்புமணி பேட்டி

மேகதாதுவில் அணை கட்டக்கூடாது என ராகுல் காந்தி கூறினால் தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகத் தயார் என பாமக தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் பாமக தலைவர் அன்புமணி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், "மேகதாது அணை விவகாரம் தொடர்பாக தமிழக முதல்வர் கர்நாடகத்துக்கு சென்று பேச்சுவார்த்தை நடத்தும் சூழல் ஏற்பட்டால் அது தமிழ்நாட்டுக்கு மிகப்பெரிய பாதகமாக அமையும். மேகதாது அணையை தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளவில்லை. அதனை அங்கீகரிக்கவும் இல்லை. அங்கீகரிக்கப்படாத ஒரு திட்டம் குறித்து கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் எந்தஅர்த்தமும்இல்லை.

மேகதாது அணை விவகாரத்தில் மத்திய அரசு, பிரதமர் நரேந்திர மோடியுடன் தான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். பிரதமரிடம் அழுத்தம் கொடுத்து மேகதாது அணையை கட்டக்கூடாது. அதற்கான விரிவான திட்ட அறிக்கையை திரும்பப் பெறவேண்டும்என மத்திய அரசு உத்தரவிட வேண்டும்.

தற்போது கர்நாடக அணைகளில் 62 டிஎம்சி தண்ணீர் இருப்பதாக கூறப்படுகிறது. காவிரி நீர் மேலாண்மை ஆணையம் கடந்த மாதத்தில் 2 முறை கர்நாடக அரசு தண்ணீரை திறந்துவிட வேண்டும் என்றுதெரிவித்துள்ளது. ஆனால் கர்நாடக அரசு




தங்களிடம் தண்ணீர் இல்லை எனவும், தமிழகத்துக்குதண்ணீர்திறந்துவிட முடியாது என்றும் கூறி வருகிறது.

தமிழ்நாட்டுக்கு தண்ணீர் வழங்க மறுக்கும் கர்நாடக அரசிடம் சென்று பேச்சுவார்த்தை நடத்துவதில் என்ன பயன் உள்ளது? மேகதாது அணை கட்டப்படுவதற்கு முன்பாகவே தமிழகத்துக்கு தண்ணீர் வழங்க கர்நாடக அரசு மறுக்கிறது. நாளை மேகதாது அணை கட்டப்பட்டுவிட்டால் தமிழ்நாட்டில் குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்படும். எனவேதமிழக முதல்வர் கர்நாடகத்துக்கு சென்று பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது.

முதலில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை தமிழக அரசு கூட்ட வேண்டும். இது தவெக பிரச்சினை அல்ல. ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் பிரச்சனை. இந்த விவகாரத்தை வேறு விதமாக கர்நாடக அரசு கொண்டு செல்கிறது. அந்த சூழ்ச்சியில் தமிழக முதல்வர் சிக்கிக்கொள்ளக்கூடாது.

மத்திய அரசில்உள்ள பாஜகவும் கர்நாடகத்தில் ஆட்சி செய்யும் காங்கிரஸும்இந்தவிவகாரத்தில் கூட்டுச் சதி செய்கின்றனர். அந்த சதியில்தமிழ்நாடும், தமிழக முதல்வரும் சிக்கிக்கொள்ளக்கூடாது. இது ஒட்டுமொத்த விவசாயிகள் மற்றும் தமிழக மக்களின் கோரிக்கையாக உள்ளது. தமிழக முதல்வரை யார் வழிநடத்துகிறார்கள் என்பது தெரியவில்லை. இது தவறான போக்கு கண்டிக்கத்தக்கது. எனவே இதுபோன்ற நடவடிக்கையை தமிழக முதல்வர் தவிர்க்க வேண்டும்" என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "மாநிலங்களவையில் நான் எழுப்பிய கேள்விக்கு மத்திய நீர்வளத்துறை இணை அமைச்சர் பதிலளித்துள்ளார். அந்தப்பதிலில் உச்சநீதிமன்றம் கடந்த 2018-ஆம் ஆண்டு வழங்கிய தீர்ப்பில் கர்நாடகாவில் அணை கட்டுவதற்கு முன்பு தமிழ்நாட்டின் அனுமதியைப் பெற வேண்டும் என்று எந்த இடத்திலும் கூறப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கண்டிக்கத்தக்கது. இதுதொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக டெல்லியில் உள்ள தமிழகத்தைச் சேர்ந்த அனைத்து மாநிலங்களவை உறுப்பினர்களிடமும் பேசி வருகிறேன்.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் பல்வேறு விஷயங்கள் தெளிவாக கூறப்பட்டுள்ளன. 1892 மற்றும் 1924 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்படவில்லை என்றும், இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகும் அவை தொடர்ந்து நடைமுறையில் உள்ளன என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மேல்மடை மாநிலத்தில் எந்தவிதமான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும், கீழ்மடை மற்றும் கடைமடை மாநிலங்களின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் உலக அளவில் முக்கியத்துவம் வாய்ந்தது. உலகின் பல்வேறு நாடுகளுக்கிடையே பாயும் ஆறுகளுக்கும் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களுக்கிடையே பாயும் ஆறுகளுக்கும் இதுபோன்ற ஒப்பந்தங்களே தீர்வாக உள்ளன.

எனவே இந்த ஒப்பந்தங்களை மீறி எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது. காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பும் இதைத்தான் கூறுகிறது. உச்சநீதிமன்றத் தீர்ப்பும் இதைத்தான் தெளிவுபடுத்துகிறது. ஆனால் இந்த விவகாரத்தை திரித்து தவறான தகவல்களை மத்திய இணைஅமைச்சர்தெரிவித்துவருகிறார்.இதனை கண்டிக்கிறோம் இதுபோன்ற தவறான தகவல்களை சொல்லக்கூடாது.

தமிழக முதல்வர் எங்களையும் அழைத்துக்கொண்டு, பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க வேண்டும் என்பதைத்தான் நாங்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். பிரதமரை சந்தித்து மேகதாது அணை கட்டப்படுவதை தடுக்க வேண்டும் என்று வலியுறுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மாணிக்கம் தாகூர் தனது தலைவர் ராகுல் காந்தியிடம் இதுகுறித்து தெரிவிக்க தைரியம் இருக்கிறதா?

அந்தமான், நிகோபார் தீவில் மத்திய அரசு செயல்படுத்தும் கிரேட் நிகோபார் திட்டம் தொடர்பாக காடுகள் அழிக்கப்படுவதால் அந்தத் திட்டத்தை செயல்படுத்தக்கூடாது என்று ராகுல் காந்தி கூறினார்.

அதேபோல் மேகதாது அணை கட்டப்பட்டால் சுமார் 12,500 ஏக்கர் காடுகள் அழிக்கப்படும் என்றும், 3 புலிகள் சரணாலயங்கள் பாதிக்கப்படும் சூழல் வரும். இதனால் மேகதாது அணை கட்டக்கூடாது என்று சொல்வதற்கு ராகுல் காந்திக்கு தைரியம் இருக்கிறதா?

ஆகஸ்ட் 1-ஆம் தேதி தமிழகம் வரும் ராகுல் காந்தி மேகதாது அணை தமிழ்நாட்டுக்கு எதிரானது, அணை கட்டக்கூடாது என்று கூறினால் நாங்கள் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலகுகிறோம்" என்றுஅன்புமணிசவால் விடுத்தார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.